ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இல: PS/GPA/Circular/34/2020
16.11.2020

அமைச்சுகளின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**தேசிய மட்டத்தில் கொவிட் -19 வைரஸைக் கட்டுப்படுத்துவோம்: (ஆரோக்கியமாக இருப்போம்) டிஜிட்டல் தீர்வு**

இலங்கையின் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் (ஐ.சி.டி.ஏ) இலங்கையினுள் கொவிட் – 19 வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டு மக்களுடைய நடமாட்டங்களை முகாமைத்துவம் செய்யும்நோக்கில் இணைய அடிப்படையிலான "**ஆரோக்கியமாக இருப்போம்**" டிஜிட்டல் தீர்வை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. புதிய இயல்புநிலையின்கீழ் கொவிட் – 19 வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொடர்புடையவர்களை இனங்காணுதல், ஆரோக்கியமான நபர்களுக்குச் சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் என்ற அடிப்படையான 2 விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், "**ஆரோக்கியமாக இருப்போம்**" டிஜிட்டல் தீர்வின் ஊடாக இச்சவால்களை நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் வழிகாட்டுதல் மற்றும் நெறிப்படுத்தலின்கீழ் உருவாக்கப்பட்ட இந்த "**ஆரோக்கியமாக இருப்போம்**" டிஜிட்டல் தீர்வானது எளிமையான மற்றும் பயன்படுத்த இலகுவானதுடன் கொவிட்-19 தடுப்புடன் தொடர்புடைய அனைவரையும்போன்று அரச மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கும் சகல குடிமக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய தீர்வொன்றாகப் பாவிக்க முடியும்.



ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனையின்கீழ் செயற்படுத்தப்படும் "**ஆரோக்கியமாக இருப்போம்**" டிஜிட்டல் தீர்வை தமது நிறுவன வளாகத்தினுள் பயன்படுத்துமாறு சகல நிறுவனத் தலைவர்களிடமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. "**ஆரோக்கியமாக இருப்போம்**" டிஜிட்டல் தீர்வைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் ஏனைய தேவையான ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த டிஜிட்டல் தீர்வைத் தங்களது நிறுவன வளாகத்தில் செயற்படுத்துவதற்காக பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. ஒவ்வொரு அரச நிறுவனமும் (www.staysafe.gov.lk) எனும் வலைத்தளத்தினுடாகப் பதிவுசெய்து நிறுவனத்துக்குரிய QR குறியீட்டுடன் கூடிய சுவரொட்டியை உருவாக்க வேண்டும். இந்தச் சுவரொட்டியை அச்சிட்டு நிறுவனத்தின் நுழைவாயில்கள் அனைத்திலும் தெளிவாகப் பார்க்கக்கூடியவாறு காட்சிப்படுத்துதல் வேண்டும்.

2. நிறுவனத்திலிருந்து வெளியேறுவதற்காகத் தனியான வாயில் இருப்பின், அதன் சகல இடங்களிலும் QR குறியீட்டுடன் கூடிய சுவரொட்டியின் நகலொன்றை அச்சிட்டுக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

3. ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் அனைத்து ஊழியர்களும் விருந்தினர்களும் நிறுவன வளாகத்திற்குள் நுழையும்போது QR குறியீட்டை ஸ்கேன் செய்து அதுபற்றி உறுதிசெய்ததன்பின்னர் நிறுவனத்திற்குள் நுழைதல்வேண்டும்.

4. ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தாத அனைத்து ஊழியர்களும் விருந்தினர்களும் நிறுவன வளாகத்திற்குள் நுழையும்போது குறுந்தகவல் முறைமையைப் பயன்படுத்த முடியும்.

5. நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும் விருந்தினர்களும் நிறுவன வளாகத்திலிருந்து வெளியேறும்போது மீண்டும் QR குறியீட்டை ஸ்கேன் செய்து அதுபற்றி உறுதிசெய்து நிறுவனத்திலிருந்து வெளியேறுதல் வேண்டும்.

6. அனைத்து ஊழியர்களும் விருந்தினர்களும் வருகை தந்துள்ளனர் மற்றும் வெளியேறியுள்ளனர் எனச் சரிபார்த்தலானது அனைத்து அரச நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

தேவையான விரிவான வழிகாட்டல் தொகுப்பு இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது.

இதுபற்றிய மேலதிக தகவல்களுக்கு திரு. கசுன் தாரக (0768254047), திரு. சாமீந்திர பெரேரா (071-8327380) அல்லது திரு.திலின திசாநாயக்க (077-2954866) ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும். அதேபோன்று hello@staysafe.gov.lk எனும் மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

ஒப்பம்.˙. **பி. பீ. ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்

பிரதி:

பிரதமரின் செயலாளர்
அமைச்சரவையின் செயலாளர்
செயலாளர், நிதி அமைச்சு
கணக்காய்வாளர் நாயகம்
தலைவர், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையம்




ICTA
*ideas actioned*

கொவிட் அச்சுறுத்தலில் இருந்து உங்களையும் நாட்டையும் பாதுகாக்கும் “STAY SAFE SRI LANKA” உடன் நீங்களும் இன்றே பதிவுசெய்யுங்கள்

www.staysafe.gov.lk

**"ஆரோக்கியமாக இருப்போம்" கொவிட் தடமறிதல் (ட்ரேசர்) மென்பொருளைப் பயன்படுத்தி உங்களையும், உங்கள் நிறுவனத்தையும் மற்றும் சமூகத்தையும் பாதுகாக்கவும்.**

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் பதில்கள்

1. **"ஆரோக்கியமாக இருப்போம்" கொவிட் தடமறிதல் (ட்ரேசர்) டிஜிட்டல் தீர்வு (https://staysafe.gov.lk/) என்றால் என்ன?**

   நாம் அனைவரும் சுதந்திரமாகவும், கவனமாகவும் எமது சாதாரண வாழ்க்கையை நடாத்த வேண்டுமென்றால், கொவிட் பரவுவதை நிறுத்த வேண்டும். அதேபோன்று வழக்கம்போல தங்கள் வணிக வளாகங்களையும் அரசு நிறுவனங்களையும் நடாத்திச் செல்லவேண்டும். கொவிட் 19 வைரஸ் பரவுதலைத் தடுப்பதற்கும் அவ்வாறு பரவும் வழிகளைத் தடுப்பதற்கும் கொவிட் 19, வைரஸின் பாதிப்புக்குள்ளானவர்களை அடையாளம் காணுதல், அவர்களது விபரங்களைத் தேடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன மிகவும் முக்கியமானதாகும். , இந்த விடயத்தைக் கவனமாகச் செய்வதற்காக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ஐ.சி.டி.ஏ) மற்றும் அதன் துணை நிறுவனங்களுடன் இணைந்து கொவிட் தடமறிதல் (ட்ரேசர்) டிஜிட்டல் தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளன.

2. **கொவிட் தடமறிதல் (ட்ரேசர்) டிஜிட்டல் தீர்வு அரச நிறுவனங்களுக்கு எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும்?**

   1. அரச நிறுவனத்தின் நடவடிக்கைகள் மற்றும் வழங்கும் சேவைகளை மிகவும் திறமையாகவும் பாதுகாப்பாகவும் வழங்கக்கூடியதாக இருத்தல்.
   2. நீங்களும் உங்கள் நிறுவனத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் மிகவும் பாதுகாப்பாக இருத்தல்.
   3. உங்கள் நிறுவனத்திற்கு வந்த ஒருவர் கொவிட் 19 நோய்த்தொற்றுக்கு ஆளானபோது அதுபற்றி விழிப்புடன் இருத்தல்.
   4. நிறுவனத்திற்கு வருகை தரும் நபர்களின் விவரங்களைப் புத்தகங்களில் எழுதத் தேவையில்லை.

5. QR ஸ்கேன் வசதி மூலம் உங்களுக்குத் தாமதமின்றி சம்பந்தப்பட்ட நபர்கள் இடங்களுக்கு நுழையவும் வெளியேறவும் சந்தர்ப்பத்தை வழங்குதல்.
6. சுகாதாரத் துறையுடன் துல்லியமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், நோய் பரவாமல் தடுக்கவும் உதவுதல்.

## 3. எமது நிறுவனத்திற்கு QR குறியீட்டை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

இது, சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்தின் தலைவர் அல்லது அவர்கள் பரிந்துரைத்த பொறுப்பான அதிகாரியொருவரால் செய்யப்படல் வேண்டும்.

1) முதலில் நீங்கள் (https://staysafe.gov.lk க்குச் செல்லுங்கள்.
2) அங்குள்ள பதிவு பொத்தானைக் கிளிக் செய்க.
3) நீங்கள் பெறும் படிவத்தில் உங்களது அரச நிறுவனத்துக்குரிய தகவல்களை வழங்குவதன் மூலம் பதிவுசெய்யவும்.
4) உங்கள் நிறுவனம் இந்தத் தீர்வுக்காகப் பதிவுசெய்யும் நேரத்தில், உங்கள் நிறுவனத்தின் QR குறியீடு மற்றும் இருப்பிட Location IDயும் வழங்கப்படும். உங்கள் நிறுவனத்துக்குரிய QR குறியீடு மற்றும் நிறுவனத்தின் இருப்பிடத்தின் Location ID யுடன் அறிவித்தலொன்றைப் பதிவுசெய்யும்போது பதிவிறக்கம் செய்யலாம்.
5) பதிவிறக்கம் செய்யப்பட்ட இருப்பிட Location ID மற்றும் QR குறியீட்டைக் கொண்ட அறிவித்தலைத் தெளிவாக அச்சிட்டு, அதை அனைத்து நுழைவாயில்களிலும் வெளியேறும் இடங்களிலும் தெளிவாகக் காணக்கூடிய வகையிலும் QR குறியீட்டை ஸ்கேன் பண்ணக்கூடிய விதத்திலும் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

## 4. தங்களது நிறுவனத்தின்கீழ் இயங்கும் கிளைகளுக்குத் தனி விரிவான குறியீடுகள் பெற வேண்டுமா?

ஆம். நிறுவன வளாகத்தினுள் கிளைகள் இருந்தால், அதற்காகத் தனித்தனியாகக் QR குறியீடுகளைப் பெற வேண்டும் (இருப்பிடத் தகவல்ளைத் துல்லியமாக அடையாளம் காண்பதற்காக).

5. **நிறுவன கட்டிடத்திலேயே தனித்தனி மாடிகளுக்கு இதைப் பெற வேண்டுமா?**

ஆம். நிறுவனக் கட்டிடத்திலுள்ள தனித் தளங்களுக்குத் தனித்தனியாக QR குறியீடுகளைப் பெற வேண்டும் (இருப்பிடத் தகவல்ளைத் துல்லியமாக அடையாளம் காண்பதற்காக).

6. **ஆரோக்கியமாக இருப்போம்! கொவிட் தடமறிதல் டிஜிட்டல் தீர்வுக்கு அரச நிறுவனங்களைப் பதிவுசெய்ய (https://staysafe.gov.lk/) இணையத்தளம் மாத்திரமா உள்ளது?**

   1. நிறுவனத்தை பதிவுசெய்ய வேண்டுமாயின் https://staysafe.gov.lk/ என்ற இணையத்தினூடாகப் பதிவு செய்யமுடியும்.
   2. பொதுமக்கள் இந்தத் தீர்வு மற்றும் பதிவுசெய்ய வேண்டுமாயின் SS REG <NICNo> எனக் குறிப்பிட்டு 1919 க்கு குறுந்தகவல் அனுப்ப முடியும். அவர்களுக்குப் பதிவை உறுதிப்படுத்திய குறுந்தகவலொன்று கிடைக்கப்பெறும்.
   3. பொதுமக்கள் உங்கள் நிறுவனத்திற்குள் நுழைய வேண்டுமாயின் அல்லது நிறுவனத்திலிருந்து வெளியேற வேண்டுமாயின் SS < Location ID > எனக் குறிப்பிட்டு 1919 குறுந்தகவல் அனுப்ப முடியும். அவர்களுக்குப் பதிவை உறுதிப்படுத்திய குறுந்தகவலொன்று கிடைக்கப்பெறும்.

7. **இதற்காக யாராவது ஒரு தனி ஊழியரை நியமிக்க வேண்டுமா?**

சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் நிறுவனத்தின் நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் இடங்களில் துல்லியமாக காட்சிப்படுத்தப்படல் வேண்டும். வருகைதரும் நபர்கள் அதைச் சரியாகச் செய்கிறார்களா என்று எப்போதும் கண்காணிக்க வேண்டும். அதற்காகப் பொருத்தமான நடவடிக்கைகள் அல்லது மேற்பார்வை செய்வதற்காக நபரொருவரை நியமித்தல் என்பன சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் செய்யப்பட வேண்டும்.

8. **யாராவது தவறான தகவல்களைக் கொடுத்தால் என்ன ஆகும்?**

அவர்களை அடையாளம்கண்டு கொவிட் - 19 மற்றும் அது தொடர்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

9. **எமது நிறுவனத்திற்கு வந்தவர்களின் விவரங்களைப் பார்வையிட முடியுமா?**

தகுதிவாய்ந்த அதிகாரிகளைத் தவிர வேறெவரும் யாருடைய விவரங்களையும் பார்க்க முடியாது.

10. **நிறுவனத்தின் உள் ஊழியர்கள் இந்த டிஜிட்டல் தீர்வு மூலம் தினசரி வருகை, செல்கைகளைப் பதிவு செய்ய வேண்டுமா?**

ஆம், நிறுவனத்தின் ஊழியர்கள் எப்போதுமே தங்கள் நிறுவனத்திற்கு வரும் போதும், வெளியே செல்லும்போதும் வேறு இடங்களுக்குச் செல்லும்போதும் QR குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு - 0772383847 | 0776174208